

தனி பிரதி
ரூ.10/-

Single Copy
Rs.10/-


ANNUAL SUBSCRIPTION
Rs.120/-



# பொறியியல் கதிர்
# PORIYIYAL KADHIR

TAMIL & ENGLISH MONTHLY


| | | | |
|---|---|---|---|
| கதிர் 54 | பாரிப்பு 2 | திருவள்ளுவர் ஆண்டு 2054 | நவம்பர் - 2023 |
| KADHIR 54 | PAARIPPU 2 | THIRUVALLUVAR AANDU 2054 | NOVEMBER - 2023 |


நூற்றாண்டு விழா சங்கம் - A CENTENARY ASSOCIATION

தோற்றம்
1910

## தமிழ்நாடு பொறியியல் சங்கம்

பொதுப்பணித்துறை

சேப்பாக்கம், சென்னை - 600 005.

நூற்றாண்டு
2010

அரசு ஆணை எண்: Ms. 822 நாள். 27.09.1928 அங்கீகரிக்கப்பட்டது

**TAMILNADU ENGINEERING ASSOCIATION - PWD**
CHEPAUK, CHENNAI - 600 005.


Website : www. tnengga. org email id : tneapwd@yahoo.co.in

தமிழ்நாடு பொறியியல் சங்கம், வேலூர் கிளையின் இணைச்செயலாளர் பொறியாளர் M.நடராஜன், உதவிசெயற்பொறியாளர் அவர்கள் பணிஓய்வை முன்னிட்டு கிளைப் பொறுப்பாளர்கள் வாழ்த்து தெரிவித்தனர்.



தமிழ்நாடு பொறியியல் சங்கம் தஞ்சாவூர் கிளையின் பொதுக்குழுக்கூட்டத்தில் பதவி உயர்வு மற்றும் பணிஓய்வு பெற்ற பொறியாளர்களுக்கு பாராட்டு தெரிவித்தல்.






## பொதுச்செயலாளர் மடல்

மடல் - 2 (2023 - 2024)



# தொடரும்
## நம் பயணம் .......

### அன்பார்ந்த பொறியாளர் சகோதர, சகோதரிகளே! வணக்கம்!

கண்காணிப்புப் பொறியாளர் மற்றும் செயற்பொறியாளர் பதவி உயர்வு நீதிமன்ற தடையாணைகளால் வழங்கப்படாமல் உள்ளது.

நீர்வளத்துறையில் தற்போது 81 உதவிசெயற்பொறியாளர் காலிப்பணியிடங்கள் உள்ளது. அதை நிரப்புவதற்காக பணிகள் மும்முரமாக நடைபெற்று வருகிறது. அனைவர்களின் கமுக்க அறிக்கை வரப்பெற்று மேற்கொண்டு உதவிசெயற்பொறியாளர் பதவி உயர்வுக்கான பணிகள் நடைபெற்று வருகிறது.

பொதுப்பணித்துறையில் உதவிசெயற்பொறியாளர் பதவி உயர்வுக்காக கடுமையாக முயற்சித்து வருகிறோம்.

TA to AE வழக்கு உயர்நீதிமன்றத்தில் முடிவுக்கு வந்ததால் மாற்றுச்சங்கம் உச்சநீதிமன்றத்திற்கு Appeal செய்திருக்கிறது. அந்த வழக்கோடு 155 அரசாணையின் படி பணிவரன்முறை செய்யப்பட்டவர்களுக்கான வழக்கையும் TA to AE வழக்கறிஞரால் இணைக்கப்பட்டுள்ளது.

அண்மையில் உச்சநீதிமன்றத்தில் மாற்றுச்சங்கத்தை சார்ந்த 3 பேர் அந்த வழக்கில் மனுதாரர்களாக இணைந்துள்ளார்கள். இந்த வழக்கு உச்சநீமன்றம் செல்ல வேண்டிய வழக்கே அல்ல. உயர்நீதிமன்றத்திலேயே முடிந்திருக்கும் TA to AE தவறான வழிகாட்டுதலால் உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்தால் இப்படி இந்த வழக்கு உச்சநீதிமன்றம் வரை சென்று குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளது.

இந்த உச்சநீதிமன்ற வழக்குகளை உரிய முறையில் எதிர் கொள்வோம் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

**வாழ்க தமிழ்நாடு பொறியியல் சங்கம்**
**வளர்க பொறியாளர்களின் சங்க உணர்வு**
**தேச நலன் காப்போம்.**

இத்துடன் இந்த மடலை நிறைவு செய்கிறேன். மீண்டும் அடுத்த மடலில் சந்திப்போம். நன்றி.

(த. முருகேசன்)
பொதுச் செயலாளர்

**Er.D. MURUGESAN, General Secretary**
**Cell Nos.** 9444 999 588, 9444 65 65 44
**E.mail: d.murugavelsivan@gmail.com**

## இரங்கல்

தமிழ்நாடு பொறியியல் சங்கம் கன்னியாகுமரி கிளை உறுப்பினர் பொறியாளர் S.கணேசன், உதவி செயற்பொறியாளர் (ஓய்வு) அவர்கள் 28.10.2023 அன்று இயற்கை எய்தினார்.

தமிழ்நாடு பொறியியல் சங்கத்தின் முன்னாள் மாநிலத் தலைவர் பொறியாளர் C.P.சண்முகம், உதவி செயற்பொறியாளர் (ஓய்வு) அவர்களின் சகோதரி திருமதி சரஸ்வதி அவர்கள் 01.11.2023 அன்று இயற்கை எய்தினார்.

## உறுப்பினர்களின் கவனத்திற்கு

சென்னை பொறியியல் இல்லத்தில் மாத வாடகையில் (Monthly Rent) தங்குவதற்கு மாத வாடகை கட்டணமாக ரூபாய் 5000/- (ஐயாயிரம் மட்டும்) என முடிவு செய்யப்பட்டுள்ளது. எனவே உறுப்பினர்கள் மற்றும் அவர்களுடைய உறவினர்கள் பயன்படுத்திக் கொள்ளும் படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

## உறுப்பினர்களின் கவனத்திற்கு

புனரமைக்கப்பட்ட சென்னை பொறியியல் இல்லம் உறுப்பினர்கள் பயன்பாட்டிற்கு வழங்கப்பட்டு வருகிறது. எனவே சென்னைக்கு வரும் உறுப்பினர்கள் மற்றும் அவர்களுடைய உறவினர்கள் புனரமைக்கப்பட்ட சென்னை பொறியியல் இல்லத்தை பயன்படுத்திக் கொள்ளும் படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**ABSTRACT**

Lumpsum Amount - Granting Lumpsum amount for acquiring additional educational qualification to the State Government Employees - Guidelines - Orders - Issued.

**HUMAN RESOURCES MANAGEMENT (FR-IV) DEPARTMENT**

G.O.(Ms).No.95 Dated 26.10.2023
சோபகிருது, ஐப்பசி - 09.
திருவள்ளுவர் ஆண்டு - 2054
Read:

1. G.O.(Ms). No.37, Personnel and Administrative Reforms (FR-IV) Department, dated 10.03.2020.
2. G.O.(Ms).No. 116, Personnel and Administrative Reforms (FR-IV) Department, dated 15.10.2020.
3. G.O.(Ms).No.120, Human Resources Management (FR-IV) Department, dated 01.11.2021.
4. Letter No.4470/FR-IV/2022-1, Human Resources Management (FR-IV) Department, dated 18.02.2022.

**ORDER:**

The scheme of awarding cash rewards to Government Servants was started in the year 1963 based on the recommendations of the then Madras Pay Commission, for the purpose of manning important clerical and higher supervisory posts in some of the Departments with staff qualified in such Departmental Tests. The scheme was started with cash rewards to clerks of Revenue Department who pass all Revenue Tests, and then this scheme was extended to other important Departments also in respect of tests which may be considered to be of crucial importance in those Departments. Subsequently, one advance increment was sanctioned for passing Account Test Examination. This scheme of cash rewards was then expanded by sanctioning two advance increments for those who acquire Post Graduate Degree of Master of Management Sciences, with a direction to the Departments concerned that the Departments may be made responsible to ensure that the Officers with such additional qualifications are properly utilized by posting them to appropriate post.

2. As early as in the year 1983, the scheme of granting advance increments was replaced by granting lumpsum for the reason that a person in the higher scale of pay will be getting more benefits than the one in the lower scale of pay, as the benefit is related to the rates of increments in the scale of pay. Further, the scheme also made juniors in any particular category, acquiring special qualifications eligible

for more pay than the seniors in the same category. Hence, a decision was taken that granting of lumpsum amount would be the viable solution for setting right pay anomalies.

3. With the widespread development of higher educational institutions in our State, leading to a higher Gross Enrollment Ratio (GER) in all sectors of higher education, more and more qualified hands are applying to all types of Government and quasi-Government employment. More so, graduates with professional qualifications such as Bachelor of Engineering (B.E), Bachelor of Technology (B.Tech), Bachelor of Science (B.Sc) (Agriculture), Master of Business Administration (MBA) are also finding the Government salary / scales and conditions of services highly attractive, obviating the need for a specific increment to attract the highly qualified hands.

4. After taking into the above aspects as detailed in para 5 of the Government Order first read above [G.O.(Ms).No.37, Personnel and Administrative Reforms (FR-IV) Department, dated 10.03.2020], a policy decision was taken and was ordered that the scheme of sanction of advance increment for acquiring higher qualification in all Departments and all orders issued by all Departments for sanction of advance increment for possessing higher qualification / passing Account Test for Sub-ordinate Officers - Part-I, as a whole, be cancelled / dispensed, with immediate effect. Subsequently, in the Government Order second read above, certain clarification were issued.

5. Subsequently, the Hon'ble Chief Minister on 07.09.2021 announced under Rule 110 of the Tamil Nadu Legislative Assembly Rules, on the floor of the Tamil Nadu Legislative Assembly as follows:-

"அரசுப் பணியாளர்கள் தங்கள் பணிக்காலத்தில் பெற்றிடும் கூடுதல் கல்வித் தகுதிகளுக்கான ஊக்க ஊதிய உயர்வு 2020-ம் ஆண்டு இரத்து செய்யப்பட்டது. அரசுப் பணியாளர்கள் பெற்றிடும் கூடுதல் கல்வித் தகுதியின் மூலம் அவர்களுடைய பணித்திறன் மற்றும் அவர்களது செயல்பாடுகள் மேம்படுவதை ஊக்குவிக்கும் பொருட்டு, உயர்கல்வித் தகுதிகளுக்கான ஊக்கத்தொகை ஒன்றிய அரசால் அண்மையில் அறிவித்துள்ள வழிகாட்டு முறைகளின் அடிப்படையில் விரைவில் அறிவிக்கப்படும்."

6. Accordingly, orders were issued in the Government order third read above, namely, G.O.(Ms) No.120, Human Resources Management (FR-IV) Department, dated 01.11.2021, for granting incentive in the form of one-time lumpsum amount to the State Government Employees for having acquired additional qualification after 10.03.2020 as follows:-

| Sl. No. | Higher Qualification | Amount (Rs) |
|---|---|---|
| 1. | Ph.D | 25,000/- |
| 2. | PG Degree of equivalent | 20,000/- |
| 3. | Degree / Diploma | 10,000/- |

It may be noted that this decision emulates closely the decision taken by Government of India which in turn based on the 7th Central Pay Commission recommendations, i.e., to grant a one-time lumpsum incentive to the relevant higher educational qualifications. In this regard, further clarifications were also issued in the Government Letter fourth read above.

7. Now, it has come to the notice of the Government that substantial number of claims are pending from candidates with higher educational qualifications. Hence, to expeditiously process and bring clarity to the scheme of granting incentive, in partial modification of the orders issued in the Government Order second and third read above and clarifications issued in the Government Letter fourth read above, the cut-off date for sanction of advance increments for having acquired higher educational qualifications ended and the new scheme of sanction of lumpsum amount is ordered to take effect from 10.03.2020. Thus, the clarification issued in Government Order second read above and the Government Letter fourth read above are harmonized to ensure that, all pending applications as on 10.03.2020 and claims made subsequently for sanction of benefits for having acquired higher educational qualifications shall be disposed as per this new scheme of granting lumpsum incentives only and not the earlier scheme of granting increments in salary. This principle would ensure expeditious disposal of all pending claims, and also maintain parity and equal treatment between the claims pending as on date and for the persons acquiring higher educational qualifications in future also.

8. The Government, therefore, directs that the Government Servants, who acquire additional educational qualifications including those who have already submitted applications seeking incentive therefor, shall henceforth be granted only with one-time lumpsum as ordered in the Government order third read above, and the following guidelines are issued:-

(i) The incentive will not be available for the qualifications which are laid down as essential or desirable qualifications in the recruitment rules for the post.

(ii) No incentive shall be allowed for acquiring higher qualification purely on academic or literary subjects. The acquisition of the qualification should be directly related to the functions of the post held by him/her, or to the functions to be performed in the next higher post. There should be direct nexus between the functions of the post and the qualification acquired and that it should contribute to the efficiency of the government servant.

(iii) The quantum of incentive will be uniform for all posts, irrespective of their classification or grade or the Department.

(iv) The incentive shall not be admissible where the Government servant is sponsored by the Government or he/she avails study leave for acquiring the qualification.

(v) The incentive would be given only for higher qualification acquired after induction into service.

(vi) No incentive would be admissible if an appointment is made in relaxation of the educational qualification. No incentive would be admissible if employee acquires the requisite qualification for such appointment as a later date.

(vii) The qualifications meriting grant of incentive should be recognized by University Grants Commission, respective regulatory bodies like All India Council for Technical Education (AICTE) etc. set-up by Central/ State Government or recognized by the Government.

(viii) The incentive shall be limited to maximum two times in an employee's career, with a minimum gap of two years between successive grants.

(ix) The Government servant should prefer the claim within six months from the date of acquisition of the higher qualification in respect of future claims.

(x) The claims already rejected by the Departments concerned are not eligible for grant of lumpsum amount.

(xi) The lumpsum amount shall be granted only for those who have acquired higher qualification and not sanctioned with advance increment till date.

(xii) The Administrative Departments, shall issue orders separately in this regard, after examining the existing qualifications prescribed in the Service Rules, the duties, roles and responsibilities of the relevant posts, additional educational qualifications required for performing the relevant duties, the ways in which the higher educational qualifications for the said posts would be beneficial to the development activities of the Department and to the Government by and large and then issue orders in consultation with the Human Resources Management and Finance Departments.

9. This order issues with the concurrence of Finance Department, vide its Reference No.3386/FS/P/2023, dated 12.10.2023.

**(BY ORDER OF THE GOVERNOR)**

**SHIV DAS MEENA**
**CHIEF SECRETARY TO GOVERNMENT**

## நன்கொடை

தமிழ்நாடு பொறியியல் சங்கத்தின் தெற்கு மண்டல செயலாளர் பொறியாளர் P.முத்துசாமி, உதவிசெயற்பொறியாளர் அவர்கள் பதவி உயர்வு பெற்றமைக்காக ரூ.5,000/- (ரூபாய் ஐயாயிரம் மட்டும்) சங்க வளர்ச்சி நிதியாக வழங்கியுள்ளார்.

தமிழ்நாடு பொறியியல் சங்கம், தேனி கிளையின் செயலாளர் பொறியாளர் S.மயில்வாகனன், உதவிசெயற்பொறியாளர் அவர்கள் தனது மகன் திருமணத்தை முன்னிட்டு ரூ.2000/- (ரூபாய் இரண்டாயிரம் மட்டும்) சங்க வளர்ச்சி நிதியாக வழங்கியுள்ளார்.

தமிழ்நாடு பொறியியல் சங்கத்தின் முன்னாள் தெற்கு மண்டல செயலாளர் பொறியாளர் S.எட்வின்ஜெயராஜ், உதவிசெயற்பொறியாளர் (ஓய்வு) அவர்கள் தனது பொங்கும்நிதி முதிர்வு தொகை ரூ.1600/- (ரூபாய் ஆயிரத்து ஆறுநூறு மட்டும்) சங்க வளர்ச்சி நிதியாக வழங்கியுள்ளார்.

**FINANCE [Allowances] DEPARTMENT**

**G.O.Ms.No.310, Dated 27th October 2023**

(Sobakiruthu, Aippasi-10, Thiruvalluvar Aandu 2054)

**ABSTRACT**

**ALLOWANCES** - Dearness Allowance - Enhanced Rate of Dearness Allowance from **1st July 2023** - Orders - Issued.

**Read the following:-**

G.O.Ms.No.142, Finance (Allowances) Department, dated: 17.05.2023.

**ORDER:**

In the Government Order read above, orders were issued sanctioning revised rate of Dearness Allowance to State Government employees as detailed below:-

| **Date from which payable** | **Rate of Dearness Allowance** [per month] |
|---|---|
| [1] | [2] |
| 01-04-2023 | 42 per cent of Basic Pay |

2. Hon'ble Chief Minister has made an announcement that Dearness Allowance payable to State Government employees shall be enhanced from 42% of basic pay to 46% of basic pay with effect from 01.07.2023. Accordingly, Government sanction the revised rate of Dearness Allowance by enhancing 4% as indicated below:-

| **Date from which payable** | **Rate of Dearness Allowance** [per month] |
|---|---|
| [1] | [2] |
| 01.07.2023 | 46 per cent of Basic Pay |

3. The arrears of Dearness Allowance for the months of July, August, September and October 2023 shall be drawn and disbursed by existing cashless mode of Electronic Clearance System (ECS). While working out the revised Dearness Allowance, fraction of a rupee shall be rounded off to next higher rupee if such fraction is 50 paise and above and shall be ignored if it is less than 50 paise.

4. The Government also direct that the revised Dearness Allowance sanctioned above shall be admissible to full time employees who are at present getting Dearness Allowance and to employees paid from contingencies at fixed monthly rates. The revised rates of Dearness Allowance sanctioned in this order shall not be admissible to part time employees.

5. The revised Dearness Allowance sanctioned in this order shall also apply to the teaching and non-teaching staff working in aided educational institutions, employees under local bodies, employees governed by the University Grants Commission / All India Council for Technical Education scales of pay, Teachers /

Physical Education Directors / Librarians in Government and Aided Polytechnics and Special Diploma Institutions, Village Assistants in Revenue Department, Noon Meal Organisers, Child Welfare Organisers, Anganwadi Workers, Cooks, Helpers, Panchayat Secretaries / Clerks in Village Panchayat under Rural Development and Panchayat Raj Department and other employees drawing pay in the prescribed Level of Pay / Special Time Scale of Pay in the Pay Matrix.

6. The expenditure shall be debited to the detailed head of account "303. Dearness Allowance" under the relevant minor, sub-major and major heads of account.

7. The Commissioner of Treasuries and Accounts, Chennai is requested to issue necessary instructions to all Drawing and Disbursing Officers while presenting the arrear bill on the revised rates of Dearness Allowance sanctioned at para 2 above.

8. The Treasury Officers / Pay and Accounts Officers are requested to make payment of the revised Dearness Allowance when bills are presented if it is found to be in order.

**(BY ORDER OF THE GOVERNOR)**

**T.UDHAYACHANDRAN**
**PRINCIPAL SECRETARY TO GOVERNMENT.**

**FINANCE (Allowances) DEPARTMENT**

**G.O.(Ms).No.311, Dated: 27th October 2023.**

(Sobakiruthu, Aippasi-10, Thiruvalluvar Aandu 2054)

**ABSTRACT**

**AD-HOC INCREASE** - Employees drawing Consolidated Pay / Fixed Pay / Honorarium - Another Ad-hoc Increase from **01.07.2023** - Orders - Issued.

**Read the following:-**

1. G.O.(Ms).No.144, Finance (Allowances) Department, dated: 17.05.2023.
2. G.O.(Ms).No.310, Finance (Allowances) Department, dated: 27.10.2023.

**ORDER:-**

In the Government Order first read above, orders were issued sanctioning another Ad-hoc Increase in respect of employees those drawing revised Consolidated Pay / Fixed Pay / Honorarium as shown below:-

| With effect from | Ad-hoc Increase | |
|---|---|---|
| | Employees drawing upto Rs.2500/- p.m | Employees drawing above Rs.2500/- p.m |
| [1] | [2] | [3] |
| 01-04-2023 | Rs.50 | Rs.100 |

2. In the Government Order second read above, orders were issued enhancing the Dearness Allowance payable to Government employees who are drawing pay in Levels of Pay Matrix with effect from 01.07.2023.

3. Government has therefore, decided to grant another Ad-hoc increase to those drawing revised Consolidated Pay / Fixed Pay / Honorarium with effect from 01.07.2023. Accordingly, Government direct that employees drawing Consolidated Pay / Fixed Pay / Honorarium be allowed another Ad-hoc Increase with effect from 01.07.2023 as detailed below:-

| With effect from | Ad-hoc Increase | |
|---|---|---|
| | Employees drawing upto Rs.2500/- p.m | Employees drawing above Rs.2500/- p.m |
| [1] | [2] | [3] |
| 01-07-2023 | Rs.50 | Rs.100 |

4. The arrears of Ad-hoc Increase for the months of July, August, September and October 2023 shall be drawn and disbursed by existing cashless mode of Electronic Clearance System (ECS).

5. This order shall also apply to the employees of Local Bodies and Sweepers working in Rural Development and Panchayat Raj Department.

**(BY ORDER OF THE GOVERNOR)**

**T. UDHAYACHANDRAN**
**PRINCIPAL SECRETARY TO GOVERNMENT**

## FINANCE [Pension] DEPARTMENT
## G.O.Ms.No.312, Dated 27th October 2023
## (Sobakiruthu, Aippasi-10, Thiruvalluvar Aandu 2054)

**ABSTRACT**

**PENSION** - Dearness Allowance to the Pensioners and Family Pensioners - Enhanced Rate admissible from **1st July 2023** - Orders - Issued.

**Read the following:-**

1. G.O.Ms.No.145, Finance (Pension) Department, dated: 17.05.2023.
2. G.O.Ms.No.310, Finance (Allowances) Department, dated: 27.10.2023.

**ORDER:**

In the Government Order first read above, orders were issued sanctioning the enhanced rate of the Dearness Allowance to the State Government Pensioners / Family Pensioners as detailed below:-

| Date from which payable | Rate of Dearness Allowance [per month] |
|---|---|
| [1] | [2] |
| 01-04-2023 | **42** per cent of Basic Pension / Family Pension |

2. In the Government Order second read above, orders were issued enhancing the rate of Dearness Allowance payable to State Government Employees and Teachers from 42% to 46% with effect from 1st July 2023.

3. Following the orders issued in the reference second read above, to the serving employees, the Government sanctioned the enhanced rate of Dearness Allowance to the State Government Pensioners / Family Pensioners as indicated below:

| **Date from which payable** | **Rate of Dearness Allowance [per month]** |
|---|---|
| **[1]** | **[2]** |
| **01.07.2023** | **46** per cent of Basic Pension / Family Pension |

4. The arrears of Dearness Allowance from July 2023 to October 2023 shall be drawn and paid by existing cashless mode through IFHRMS. While working out the revised Dearness Allowance, fraction of a rupee shall be rounded off to next higher rupee if such fraction is 50 paise and above and shall be ignored if it is less than 50 paise.

5. It will be the responsibility of the Pension Disbursing Authority to calculate the quantum of Dearness Allowance payable in each individual case.

6. Pending formal authorization by the Principal Accountant General, the revised Dearness Allowance shall be paid straightaway by the Pension Pay Officer, Chennai-35 and Treasury Officers concerned.

7. This order will apply to the following categories of pensioners:-

(i) Government Pensioners, Teacher Pensioners of aided and local body educational institutions and other pensioners of local bodies.

(ii) The State Government employees who had drawn lumpsum payment on absorption in Public Sector Undertaking / Autonomous Body / Local Body / Co-operative Institutions and have become entitled to restoration of commuted portion of pension as well as revision of the restored amount.

(iii) Present and future family pensioners; In the case of divisible family pensioners, Dearness Allowance shall be divided proportionately.

(iv) Former Travancore-Cochin, State pensioners drawing their pension on 1st November, 1956 in the Treasuries situated in the areas transferred to Tamil Nadu State on that date, i.e. Kanyakumari District and Shencottai Taluk in Tenkasi District.

(v) Pensioners who are in receipt of special pensions under Extra-ordinary Pension Rules, Tamil Nadu and Compassionate Allowance.

8. The expenditure on Dearness Allowance payable to the Pensioners and Family Pensioners shall be debited to the respective following Heads of Account:

"2071. Pension and Other Retirement Benefits - 01. Civil - 101. Superannuation and Retirement Allowances - State's Expenditure - AC. Dearness Allowance to Pensioners - 303 Dearness Allowance - 01. Dearness Allowance

**(IFHRMS D.P.C. 2071 01 101 AC 30301)"**

"2071. Pension and Other Retirement Benefits - 01. Civil - 105. Family Pensions - State's Expenditure - AC. Dearness Allowance to Family Pensioners of Tamil Nadu Government - 303. Dearness Allowance - 01. Dearness Allowance.

**(IFHRMS D.P.C. 2071 01 105 AC 30301)".**

9. The orders regarding sanction of Dearness Allowance to the widows and children of the deceased Contributory Provident Fund / Non Pensionable Establishment beneficiaries of State Government and the former District Boards who are drawing ex-gratia will be issued separately.

10. The increased expenditure due to the sanction of Dearness Allowance in this order is allocable among the successor States as per the provisions laid down under the State Reorganization Act, 1956.

**(BY ORDER OF THE GOVERNOR)**

**T.UDHAYACHANDRAN**
**PRINCIPAL SECRETARY TO GOVERNMENT.**

**சுருக்கம்**

பொதுப்பணித்துறை - மதுரையை தலைமையிடமாகக் கொண்டு ஒரு கட்டட மையம் மற்றும் பாதுகாப்பு கோட்ட அலுவலகம், சென்னையை தலைமையிடமாகக் கொண்டு கட்டட மையம் மற்றும் பாதுகாப்பு உபகோட்ட அலுவலகம் - திருவண்ணாமலையை தலைமையிடமாகக் கொண்டு கட்டட மையம் மற்றும் பாதுகாப்பு உபகோட்ட அலுவலகம், திருநெல்வேலியை தலைமையிடமாகக் கொண்டு கட்டட மையம் மற்றும் பாதுகாப்பு உபகோட்ட அலுவலகம், புதிதாக தோற்றுவித்தல் மற்றும் அவற்றிற்கான மொத்தம் 42 பணியிடங்கள் பணிப்பெயர்ச்சி அடிப்படையிலும் மற்றும் 1 செயற்பொறியாளர் பணியிடம் புதிதாக தோற்றுவித்தல் - ஆணை - வெளியிடப்படுகிறது.

**பொதுப்பணி (ஜி1)த் துறை**

**அரசாணை (நிலை) எண்.52** **நாள்: 21.09.2023**
**சோபகிருது, புரட்டாசி-4**
**திருவள்ளுவர் ஆண்டு 2054**

**படிக்கப்பட்டது:**

1) அரசாணை (நிலை) எண்.216, பொதுப்பணி (எப்1)த் துறை, நாள்: 02.06.2017.
2) அரசாணை (நிலை) எண்.158, பொதுப்பணி (டி2)த் துறை, நாள்: 01.11.2021.

3) முதன்மைத் தலைமைப் பொறியாளர் மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), பொதுப்பணித்துறை, சென்னை கடிதம் எண்.உ.செ.பொ/டி10/18569/2022, நாள்: 13.02.2023.
4) முதன்மைத் தலைமைப் பொறியாளர் மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), பொதுப்பணித்துறை, சென்னை கடிதம் எண்.உ.செ.பொ/டி10/18569/2022, நாள்: 4.8.2023.

**ஆணை:**

மேலே ஒன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் நீர்வளத்துறையின் கட்டுப்பாட்டின் கீழ் சென்னையை தலைமையிடமாகக் கொண்டு இயங்கிவந்த சிறப்பு திட்டக் கோட்டம்-1 அலுவலகம் மற்றும் அதனை சார்ந்த சென்னையில் உள்ள நான்கு சிறப்பு திட்டக் கோட்ட உபகோட்ட அலுவலகங்களை பணிப் பெயர்ச்சியின் அடிப்படையில், பொதுப்பணித்துறையைச் சார்ந்த கண்காணிப்புப் பொறியாளர், பொபது, திட்டங்கள் மற்றும் வடிவமைப்பு வட்டம், சென்னை அவர்களின் கீழ் சென்னையை தலைமை இடமாகக் கொண்டு இயங்குவதற்கு ஒரு கட்டட மையம் மற்றும் பாதுகாப்பு கோட்ட அலுவலகமும் மற்றும் சென்னை, திருச்சி, கோயம்புத்தூர் மற்றும் மதுரை ஆகிய இடங்களில் தலைமையிடமாகக் கொண்டு இயங்குவதற்கு நான்கு கட்டட மையம் மற்றும் பாதுகாப்பு உபகோட்ட அலுவலகங்களும் உருவாக்கப்பட்டன மற்றும் ஒரு கட்டட மையம் மற்றும் பாதுகாப்பு கோட்டம் மற்றும் அதனை சார்ந்த நான்கு உபகோட்ட அலுவலகங்களுக்கு கீழ்க்குறிப்பிட்ட தற்காலிகப் பணியிடங்கள் ஒப்பளிக்கப்பட்டன:-

| வ. எண். | பதவியின் பெயர் | பதவிகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | செயற்பொறியாளர் | 1 |
| 2 | உதவிசெயற்பொறியாளர் | 4 |
| 3 | உதவிப் பொறியாளர் / இளநிலைப் பொறியாளர் | 14 |
| 4 | முதுநிலை வரைதொழில் அலுவலர் | 1 |
| 5 | வரைதொழில் அலுவலர் | 1 |
| 6 | இளநிலை வரைதொழில் அலுவலர் | 6 |
| 7 | உதவி வரைவாளர் | 2 |
| 8 | கோட்டக் கணக்கர் | 1 |
| 9 | கண்காணிப்பாளர் | 1 |
| 10 | உதவியாளர் | 7 |
| 11 | காசாளர் | 1 |
| 12 | இளநிலை உதவியாளர் | 9 |
| 13 | தட்டச்சர் | 3 |
| 14 | பதிவுறு எழுத்தர் | 1 |
| 15 | அலுவலக உதவியாளர் | 12 |
| 16 | காவலர் | 4 |
| 17 | இலகுரக ஓட்டுநர் | 3 |
| 18 | தொழில்நுட்ப உதவியாளர் | 1 |
| | **மொத்தம்** | 72 |

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் துறையை, பொதுப்பணித்துறை மற்றும் நீர்வளத்துறை என இரண்டாக பிரித்தல் தொடர்பான வழிமுறைகள் வெளியிடப்பட்டன.

3. மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், முதன்மைத் தலைமைப் பொறியாளர் மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), பொதுப்பணித்துறை, சென்னை அவர்கள் தமிழகத்தில் கூடுதலாக புதிய மாவட்டங்கள் தோற்றுவிக்கப்பட்ட நிலையில் அனைத்து மாவட்டங்களிலுள்ள பாரம்பரிய மிக்க கட்டடங்களை தொல்லியல் துறையின் ஆலோசனையின் அடிப்படையில் புனரமைப்பதற்கு தற்போது சென்னையை தலைமையிடமாகக் கொண்டு இயங்கிவரும் ஒரு கட்டட மையம் மற்றும் பாதுகாப்பு கோட்டம் மற்றும் அதனைச் சார்ந்த சென்னை, திருச்சி, கோயம்புத்தூர் மற்றும் மதுரை ஆகிய இடங்களில் இயங்கிவரும் நான்கு கட்டட மையம் மற்றும் பாதுகாப்பு உபகோட்டங்கள் மட்டுமே உள்ளன எனவும், மேற்கூறிய நான்கு உபகோட்டங்களுக்கு கீழ்க்காணும் மாவட்டங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது என்றும், அம்மாவட்டங்களில் நடைபெறும் புனரமைப்புப் பணிகளை அந்தந்த உபகோட்டங்கள் வாயிலாக அனைத்து பாரம்பரிய கட்டடங்களின் புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன எனவும் தெரிவித்துள்ளார்:-

| | | |
|---|---|---|
| 1. | கட்டட மையம் மற்றும் பாதுகாப்பு உபகோட்டம், சென்னை தலைமையிடம் - சென்னை | சென்னை, திருவள்ளூர், செங்கல்பட்டு, காஞ்சிபுரம், இராணிப்பேட்டை, வேலூர், திருப்பத்தூர், திருவண்ணாமலை, விழுப்புரம், மற்றும் கள்ளக்குறிச்சி ஆகிய 10 மாவட்டங்கள் |
| 2. | கட்டட மையம் மற்றும் பாதுகாப்பு உபகோட்டம், திருச்சி தலைமையிடம் - திருச்சி | திருச்சி, பெரம்பலூர், அரியலூர், கடலூர், மயிலாடுதுறை, தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம் மற்றும் புதுக்கோட்டை ஆகிய 9 மாவட்டங்கள் |
| 3. | கட்டட மையம் மற்றும் பாதுகாப்பு உபகோட்டம், கோயம்புத்தூர் தலைமையிடம் - கோயம்புத்தூர் | கோயம்புத்தூர், திருப்பூர், திண்டுக்கல், கரூர், நாமக்கல், சேலம், தருமபுரி, கிருஷ்ணகிரி, ஈரோடு மற்றும் உதகமண்டலம் ஆகிய 10 மாவட்டங்கள் |
| 4. | கட்டட மையம் மற்றும் பாதுகாப்பு உபகோட்டம், மதுரை தலைமையிடம் -மதுரை | மதுரை, தேனி, சிவகங்கை, விருதுநகர், இராமநாதபுரம், தென்காசி, தூத்துக்குடி, திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி ஆகிய 9 மாவட்டங்கள் |

(i) தற்போது பாரம்பரிய மிக்க கட்டடங்களின் புனரமைப்புப் பணிகளை மேற்கொள்ளும் ஒரு உதவிசெயற்பொறியாளர் அவர்கள் குறைந்தது 8 முதல் 11 மாவட்டங்கள் வரை பயணம் செய்து அனைத்துப் பணிகளையும் மேற்கொள்ள வேண்டிய சூழலில் உள்ளார் என்றும் பாரம்பரிய மிக்க கட்டடங்களின் புனரமைப்பு மேற்கொள்ளும் பணிகளை மேற்பார்வையிட மற்றும் மேற்கொள்ளும் செயற்பொறியாளர் அவர்கள் தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களுக்கும் பயணம் செய்து கண்காணிக்கும் சூழலில் உள்ளார்.

(ii) மேலும், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், 2022-2023- ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில், பொதுப்பணித்துறை மானியக் கோரிக்கை எண் - 39

தொடர்பாக மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள் பாரம்பரிய கட்டடங்கள் ரூ.100 கோடி மதிப்பீட்டில் பாதுகாப்பு மற்றும் மறுசீரமைத்து புனரமைக்கப்படும் என்ற அறிவிப்பினை வெளியிட்டுள்ளார்கள்.

(iii) மேலும், தமிழ்நாடு சட்ட மன்றப் பேரவையில், 2022-2023ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில், பள்ளிக் கல்வித் துறை மானியக் கோரிக்கை எண்-43 சம்மந்தமாக அறிவிப்புகள் வெளியிடப்பட்டதில், மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் ரூ.25 கோடி மதிப்பீட்டில் பாரம்பரிய பள்ளிக் கட்டடங்கள் புதுப்பிக்கப்படும் என்ற அறிவிப்பினை வெளியிட்டுள்ளார்கள்.

(iv) பல்வேறு அரசாணைகளில், 5 இடங்களில் அமைந்துள்ள பாரம்பரியக் கட்டடங்களை புனரமைப்பு செய்வதற்காகவும், ரூ.81.32 கோடி மற்றும் 29 இடங்களில் அமைந்துள்ள பாரம்பரிய கட்டடங்களை புனரமைப்பு செய்வதற்காக ரூ.80.36 கோடி நிதி ஒதுக்கீடு செய்து ஆணை வெளியிட்டதன்படி, அனைத்துப் பணிகளும் தொடங்கப்பட்டு, செவ்வனே நடைபெற்றுக் கொண்டு வருகிறது என்று தெரிவித்துள்ளார்.

4. 01.04.2023 அன்று சட்டமன்றப் பேரவையில் நடைபெற்ற பொதுப்பணித்துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்தின் போது மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்களால் பின்வரும் அறிவிப்பு வெளியிடப்பட்டது:-

"மதுரையில் ஒரு புதிய பாரம்பரிய 'கட்டட மையம் மற்றும் பாதுகாப்புக் கோட்டம்' மற்றும் சென்னை, வேலூர், திருநெல்வேலியில் புதியதாக மூன்று உபகோட்டங்கள் உருவாக்கப்படும்".

5. மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்பின்படி செயல்படுத்துவதற்காக பொதுப்பணித்துறையின் கட்டுப்பாட்டின் கீழ், கீழ்க்காணும் அலுவலகங்களுக்கு தேவையான பணியிடங்கள், பணிப்பெயர்ச்சியின் அடிப்படையிலும் மற்றும் புதியதாகவும் தோற்றுவிப்பதற்கு உரிய நிர்வாக மற்றும் நிதி ஒப்பளிப்பு வழங்குமாறு முதன்மைத் தலைமைப் பொறியாளர் மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), பொதுப்பணித்துறை, சென்னை அவர்கள் அரசைக் கேட்டுக் கொண்டார்:-

(1) மதுரையை தலைமையிடமாகக் கொண்டு இயங்கவிருக்கும் 1 (ஒரு) கட்டட மையம் மற்றும் பாதுகாப்பு கோட்டம் அலுவலகம் மற்றும் அதற்கு தேவையான 14 பணியிடங்கள் (2 பணியிடங்களை ஒப்புவிப்பு செய்வதன் மூலம் நிரந்தரப் பணியிடமாக செயற்பொறியாளர் புதிய பணியிடம் தோற்றுவித்தல் மற்றும் 13 பணியிடங்கள் பணிப்பெயர்ச்சியின் அடிப்படையில்).

(2) தற்போது கட்டட மையம் மற்றும் பாதுகாப்பு கோட்டம், சென்னை-5 அலுவலகத்தின் கட்டுப்பாட்டின் கீழ், சென்னையை தலைமையிடமாகக் கொண்டு இயங்கவிருக்கும் 1 கட்டட மையம் மற்றும் பாதுகாப்பு உபகோட்டம்-2 அலுவலகம் மற்றும் அதற்கு தேவையான 7 பணியிடங்கள் (பணிப்பெயர்ச்சியின் அடிப்படையில்).

(3) தற்போதுள்ள கட்டட மையம் மற்றும் பாதுகாப்பு கோட்டம், சென்னை-5 அலுவலகத்தின் கட்டுப்பாட்டின் கீழ், திருவண்ணாமலையை தலைமையிடமாகக் கொண்டு இயங்கவிருக்கும் 1 (ஒரு) கட்டட மையம் மற்றும் பாதுகாப்பு உபகோட்டம்

அலுவலகம் மற்றும் அதற்கு தேவையான 16 பணியிடங்கள் (பணிப்பெயர்ச்சியின் அடிப்படையில்).

(4) மதுரையை தலைமையிடமாகக் கொண்டு இயங்கவிருக்கும் 1 (ஒரு) கட்டட மையம் மற்றும் பாதுகாப்பு கோட்டம் அலுவலகத்தின் கட்டுப்பாட்டின் கீழ் திருநெல்வேலியை தலைமையிடமாகக் கொண்டு கட்டட மையம் மற்றும் பாதுகாப்பு உபகோட்டம் அலுவலகம் மற்றும் அதற்கு தேவையான 6 பணியிடங்கள் (பணிப்பெயர்ச்சியின் அடிப்படையில்).

6. மதுரையை தலைமையிடமாகக் கொண்டு இயங்கவிருக்கும் 1 கட்டட மையம் மற்றும் பாதுகாப்பு அலுவலகத்திற்கு புதியதாக நிரந்தரப் பணியிடமாக தோற்றுவிக்கப்படவுள்ள செயற்பொறியாளர் பணியிடத்திற்கு ஏற்படும் ஆண்டு ஊதியம் மற்றும் இதரப்படிகளுக்கான செலவினம் ரூ.10,17,384/-ஐ செயற்பொறியாளர், பொதுப்ணித்துறை, கட்டட கட்டுமானம் மற்றும் பராமரிப்பு கோட்டம், இராமநாதபுரம் அலுவலகத்திலுள்ள 1 செயற்பொறியாளரின் தொழில்நுட்ப நேர்முக உதவியாளர் பணியிடம் மற்றும் கட்டட கட்டுமானம் மற்றும் பராமரிப்பு கோட்டம், மதுரையின் கீழ் இயங்கும் கட்டட கட்டுமானம் மற்றும் பராமரிப்பு உபகோட்டம்-1 மதுரை அலுவலகத்திலுள்ள 1 அலுவலக உதவியாளர் (நிரந்தரப் பணியிடம்) ஆகிய 2 (இரண்டு) பதவிகளை அரசிற்கு ஒப்புவிப்பு செய்வதன் மூலம் ஏற்படும் சேமிப்பினை ரூ.12,02,304/ஐ ஈடுசெய்யலாம் என முதன்மைத் தலைமைப் பொறியாளர் மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), பொதுப்பணித்துறை, அவர்கள் தெரிவித்துள்ளார்.

7. முதன்மைத் தலைமைப் பொறியாளர் மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), பொதுப்பணித்துறை, அவர்கள் மேற்காணும் கருத்துருவின் அடிப்படையில், அரசிற்கு கூடுதல் நிதிச்சுமை ஏதுமில்லை என்றும், 1 புதிய நிரந்தர பதவியாக செயற்பொறியாளர் பதவியை உருவாக்குவதற்கு ஏதுவாக 2 பணியிடங்களை அரசிற்கு ஒப்புவிப்பு செய்வதன் மூலம் ரூ.1,84,920/- அரசிற்கு ஆண்டு சேமிப்பு ஏற்படும் என்றும் தெரிவித்துள்ளார்.

8. முதன்மைத் தலைமைப் பொறியாளர் மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), பொதுப்பணித்துறை, அவர்களின் கருத்துருவினை நன்கு ஆய்வு செய்த பின்னர் அதனை ஏற்று, மதுரையை தலைமையிடமாகக் கொண்டு ஒரு கட்டட மையம் மற்றும் பாதுகாப்பு கோட்ட அலுவலகம், சென்னையை தலைமையிடமாகக் கொண்டு ஒரு கட்டட மையம் மற்றும் பாதுகாப்பு உபகோட்ட அலுவலகம், திருவண்ணாமலையை தலைமையிடமாகக் கொண்டு கட்டட மையம் மற்றும் பாதுகாப்பு உபகோட்ட அலுவலகம், திருநெல்வேலியை தலைமையிடமாகக் கொண்டு கட்டட மையம் மற்றும் பாதுகாப்பு உபகோட்ட அலுவலகம், புதிதாக தோற்றுவித்தல் மற்றும் அவற்றிற்கான மொத்தம் 42 பணியிடங்கள் பணிப்பெயர்ச்சி அடிப்படையிலும் மற்றும் 1 செயற்பொறியாளர் பணியிடம் புதிதாக தோற்றுவிப்பதற்கு நிருவாக ஒப்பளிப்பு வழங்கி அரசு ஆணையிடுகிறது:-

(1) மதுரை தலைமையிடமாகக் கொண்டு இயங்கவிருக்கும் 1 (ஒரு) கட்டட மையம் மற்றும் பாதுகாப்பு கோட்டம் அலுவலகம் மற்றும் அதற்கு தேவையான கீழ்க்கண்ட 14 பணியிடங்கள் (2 பணியிடங்களை ஒப்புவிப்பு செய்வதன் மூலம் நிரந்தரப் பணியிடமாக 1 செயற்பொறியாளர் புதிய பணியிடம் தோற்றுவித்தல் மற்றும் 13 பணியிடங்கள் பணிப்பெயர்ச்சியின் அடிப்படையில்) தோற்றுவிக்கப்படுகிறது:-

| வ. எண். | பதவியின் பெயர் | பதவிகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | செயற்பொறியாளர் (நிலை - 25,59,300-2,17,600) | 1 |
| 2. | உதவிப் பொறியாளர் (சிவில்) - இளநிலைப் பொறியாளர் (சிவில்) | 1 |
| 3. | முதுநிலை வரைதொழில் அலுவலர் (சிவில்) | 1 |
| 4. | இளநிலை வரைதொழில் அலுவலர் | 1 |
| 5. | கண்காணிப்பாளர் | 1 |
| 6. | கோட்டக் கணக்கர் | 1 |
| 7. | உதவியாளர் | 2 |
| 8. | இளநிலை உதவியாளர் | 1 |
| 9. | தட்டச்சர் | 1 |
| 10. | ஓட்டுநர் | 1 |
| 11. | அலுவலக உதவியாளர் | 2 |
| 12. | காவலர் | 1 |
| | மொத்தம் | 14 |

(2) கட்டட மையம் மற்றும் பாதுகாப்பு கோட்டம், சென்னை-5 அலுவலகத்தின் கட்டுப்பாட்டின் கீழ், சென்னையை தலைமையிடமாகக் கொண்டு இயங்கவிருக்கும் 1 (ஒரு) கட்டட மையம் மற்றும் பாதுகாப்பு உபகோட்டம்-2 அலுவலகம் மற்றும் அதற்கு தேவையான கீழ்க்கண்ட 7 பணியிடங்கள் பணிப்பெயர்ச்சியின் அடிப்படையில் தோற்றுவிக்கப்படுகிறது:-

| வ. எண். | பதவியின் பெயர் | பணியிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | உதவிசெயற்பொறியாளர் | 1 |
| 2. | இளநிலைப் பொறியாளர் (சிவில்) / உதவிப் பொறியாளர் (சிவில்) | 3 |
| 3. | உதவியாளர் | 1 |
| 4. | அலுவலக உதவியாளர் | 1 |
| 5. | சுமைத்தூக்குப் பொறி இயக்குபவர் | 1 |
| | மொத்தம் | 7 |

(3) கட்டட மையம் மற்றும் பாதுகாப்பு கோட்டம், சென்னை-5 அலுவலகத்தின் கட்டுப்பாட்டின் கீழ், திருவண்ணாமலையை தலைமையிடமாகக் கொண்டு இயங்கவிருக்கும் 1 (ஒரு) கட்டட மையம் மற்றும் பாதுகாப்பு உபகோட்டம் அலுவலகம் மற்றும் அதற்கு தேவையான கீழ்க்கண்ட 16 பணியிடங்கள் பணிப்பெயர்ச்சியின் அடிப்படையில் தோற்றுவிக்கப்படுகிறது:-

| வ. எண். | பதவியின் பெயர் | பணியிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | உதவிசெயற்பொறியாளர் | 1 |
| 2. | உதவிப்பொறியாளர் (சிவில்) / | 4 |

| வ. எண். | பதவியின் பெயர் | பணியிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| | இளநிலைப் பொறியாளர் (சிவில்) | |
| 3. | உதவியாளர் | 3 |
| 4. | ஓட்டுநர் | 1 |
| 5. | அலுவலக உதவியாளர் | 2 |
| 6. | காவலர் | 1 |
| 7. | மஸ்தூர் | 1 |
| 8. | உதவியாள் | 1 |
| 9. | திறன்பெற்ற உதவியாளர் (தரம்-2) | 2 |
| | மொத்தம் | 16 |

(4) மதுரையை தலைமையிடமாகக் கொண்டு இயங்கவிருக்கும் 1 (ஒரு) கட்டட மையம் மற்றும் பாதுகாப்பு கோட்டம் அலுவலகத்தின் கட்டுப்பாட்டின் கீழ் திருநெல்வேலியை தலைமையிடமாகக் கொண்டு கட்டட மையம் மற்றும் பாதுகாப்பு உபகோட்டம் அலுவலகம் மற்றும் அதற்கு தேவையான 6 பணியிடங்கள் பணிப்பெயர்ச்சியின் அடிப்படையில் தோற்றுவிக்கப்படுகிறது.

| வ. எண். | பதவியின் பெயர் | பணியிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | உதவிசெயற்பொறியாளர் | 1 |
| 2. | உதவிப் பொறியாளர் (சிவில்) / இளநிலைப் பொறியாளர் (சிவில்) | 3 |
| 3. | உதவியாளர் | 1 |
| 4 | அலுவலக உதவியாளர் | 1 |
| | மொத்தம் | 6 |

9. மேலே தற்போதுள்ள கட்டட மையம் மற்றும் பாதுகாப்புக் கோட்ட அலுவலகம் மற்றும் அதனைச் சார்ந்த உபகோட்ட அலுவலகங்களின் ஒப்பளிக்கப்பட்ட தற்காலிக பணியிடங்களின் விவரங்கள் பிற்சேர்க்கை-1லும் மற்றும் புதிதாக தோற்றுவித்தல் மற்றும் பணிப் பெயர்ச்சி அடிப்படையில் உருவாக்கப்பட்ட பணியிடங்களுக்கான விவரங்கள் பிற்சேர்க்கை-2 முதல் 6 வரையிலும் மற்றும் செலவினம் பற்று வைக்கப்பட வேண்டிய கணக்குத் தலைப்புகளின் விவரங்கள் முறையே பிற்சேர்க்கை-7 இவ்வாணையுடன் இணைக்கப்பட்டுள்ளன.

10. இவ்வாணை நிதித் துறையின் அ.சா.கு.எண்.29307/Infra-I/2023. நாள் 20.09.2023-இல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது. Post Sanction Ledger No.202309 PSL 0184.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**சந்தர மோகன். B**
**அரசு முதன்மைச் செயலாளர்**

# திருமண அழைப்பிதழ்

அன்புடையீர்,

நிகழும் மங்களகரமான ஸ்ரீ சோபகிருது வருடம் ஐப்பசி மாதம் 30-ஆம் தேதி (16-11-2023) **வியாழக்கிழமை** பூர்வபட்சமும், திரிதியை திதியும், மூலம் நட்சத்திரமும், சித்தயோகமும் கூடிய சுபயோக சுபதினத்தன்று காலை **10.30 மணிக்குமேல் 12.00 மணிக்குள்** துலாம் லக்கினத்தில் சுபவேளையில்

விருதுநகர் மாவட்டம், மீசலூர் கிராமம், தெய்வத்திருவாளர்கள் **சீ.சண்முகவேலு** ஓய்வு பெற்ற ஆசிரியர் **- சீனியம்மாள்** இவர்களது மகன்வழிப் பேரனும், தேனி மாவட்டம், அன்னஞ்சி, திரு. **சு.பாண்டியன் - பரமேஸ்வரி** இவர்களது மகள்வழிப் பேரனும், எங்களது அன்பு புதல்வனுமான திருவளர்ச் செல்வன்

## M.செல்வவிக்னேஷ், B.Tech.,(IT).,

**(EBS Consultant Arthya Tech Solutions, Bangalore)**

தேனி மாவட்டம், கம்பம் புதுப்பட்டி, திரு.**S.குருசாமி - சீனியம்மாள்** இவர்களின் மகன்வழிப் பேத்தியும், தேனி மாவட்டம், கூடலூர், திரு. **R.ராமசாமி - ராஜம்மாள்** இவர்களின் மகள்வழிப் பேத்தியும், திரு.**K. முருகேசன் -** திருமதி **M. மீனா** இவர்களின் குமாரத்தியுமான திருவளர்ச்செல்வி

## M.ஜெயந்தினி, M.Sc.,

**(HDFC Bank - Asst. Manager)**

இவர்களது திருமணம் பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டு மேற்படி திருமணம், தேனி - அல்லிநகரம் **அருள்மிகு ஸ்ரீதேவி, பூதேவி சமேத ஸ்ரீ வரதராஜ பெருமாள் திருக்கோவிலில்** திருமணமும் அதனைத் தொடர்ந்து இதர வைபவங்கள் தேனி - அரண்மனைப்புதூர் விலக்கு **ஹோட்டல் ரம்யாஸ்-**ல் நடைபெறுவதால் தாங்கள் தங்கள் சுற்றம்சூழ வருகைதந்து மணமக்களை வாழ்த்தியருள அன்புடன் அழைக்கின்றோம்.

**திருமண வரவேற்பு:**
**19-11-2023 ஞாயிற்றுக்கிழமை**
மாலை 6.00 மணிக்குமேல்
**அருண்பால் ஆடிட்டோரியத்தில்**
நடைபெறும். (அரவிந்த் கண்மருத்துவமனை பின்புறம்)
பெரியகுளம் ரோடு, தேனி.

*தங்களன்புள்ள,*

Er. **S.மயில்வாகனன், B.E.,**
உதவிசெயற்பொறியாளர், நீ.வ.து,
பெரியாறு வைகை வடிநில உபகோட்டம்,
உத்தமபாளையம்,
செயலாளர், தமிழ்நாடு பொறியியல் சங்கம்,
தேனி கிளை,
**M. சாரதா,** B.A.,
**M. கீர்த்தனா**,.M.B.B.S.,
**A. பிரவீன்குமார்,**B.E **U.பிரார்த்தனாஸ்ரீ**
**தேனி. P.C.பட்டி.**
செல்: 99424 26624

# இயங்கும் உலகம்

## தஞ்சாவூர் கிளை

தமிழ்நாடு பொறியியல் சங்கம், தஞ்சாவூர் கிளையின் பொதுக்குழு, ஓய்வு பெற்ற உதவிசெயற்பொறியாளர்களுக்கு பாராட்டு விழா மற்றும் கிளையின் 2023-2024 ஆம் ஆண்டு பொறுப்பாளர்கள் தேர்வும் 05.08.2023 அன்று மாலை 6.00 மணியளவில் பொறி. P.மாரிச்செல்வன் கிளைத்தலைவர் அவர்கள் தலைமையில் இறை வணக்கத்துடன் இனிதே துவங்கப்பட்டது.

உறுப்பினர்கள் அறிமுகத்திற்கு பின்னர், கிளையின் தலைவர் பொறி.P.மாரிச்செல்வன் அவர்கள் வரவேற்புரை ஆற்றினார். கிளையின் செயல்பாடுகள் குறித்து, கிளையின் செயலாளர் பொறி. R.இளங்கண்ணன் அவர்கள் விரிவாகப் பேசியும் மையச்சங்கம் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் பற்றியும் உரையாற்றினார். மையச்சங்க செயல்பாடுகள் குறித்து கிழக்கு மண்டல செயலாளர் பொறி. R.தயாளகுமார் அவர்கள் விரிவாக எடுத்துரைத்து உறுப்பினர்களின் கேள்விகளுக்கு விரிவாக விளக்கம் அளித்தார். பொருளாளர் பொறி. V.சிவப்பிரகாசம் அவர்கள் கிளையின் வரவு, செலவு கணக்குகளை அவையில் சமர்ப்பித்து உறுப்பினர்களின் ஒப்புதலை பெற்றார். பின்பு ஓய்வு பெற்ற பொறியாளர்களுக்கு பாராட்டு விழா இனிதே நடைபெற்றது.

பின்னர் கிளையின் உறுப்பினர்கள் பொறியாளர்கள் S.அய்யனார், R.இளங்கண்ணன், R.இளமாறன், V.சிவப்பிரகாசம் ஆகியோர் தத்தமது கருத்துக்களை எடுத்துரைத்தார்கள். பின்னர் 2023-2024 ஆம் ஆண்டிற்கான கிளைத்தேர்தல் நடைபெற்று கீழ்க்கண்ட பொறுப்பாளர்கள் தேர்வு செய்யப்பட்டார்கள்.

| | |
|---|---|
| தலைவர் | - பொறியாளர் S. அய்யனார் |
| துணைத்தலைவர் | - பொறியாளர் A. இரபீந்திரன் |
| செயலாளர் | - பொறியாளர் R. இளங்கண்ணன் |
| இணைச்செயலாளர் I | - பொறியாளர் G. லலிதா |
| இணைச்செயலாளர் II | - பொறியாளர் J. புவிராஜன் |
| பொருளாளர் | - பொறியாளர் V. சிவப்பிரகாசம் |

கிளையின் இணைச்செயலாளர் பொறியாளர் J. புவிராஜன் அவர்கள் நன்றி கூற நாட்டுப்பண்ணுடன் கூட்டம் இனிதே முடிவடைந்தது.

கூட்டத்தில் கீழ்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

1. தொழில்நுட்ப உதவியாளர் பதவியிலிருந்து உதவி பொறியாளர்களாக பதவி உயர்வு பெற்றவர்களுக்கு உதவிசெயற்பொறியாளர் பதவி உயர்வு விரைந்து பெற்றுத் தருமாறு தஞ்சை கிளை கேட்டுக் கொள்கிறது.

2. டெல்டா பகுதியில் பல வருடங்களாக காலியாக உள்ள நிரந்தர பணியான (Permanennt Post) பாசன ஆய்வாளர் (Irrigation Inspector) பணியினை நிரப்ப ஆவன செய்யுமாறு தஞ்சை கிளை கேட்டுக் கொள்கிறது.

3. இளம் பொறியாளர் / உதவிப்பொறியாளர் பிரிவு என பிரிவு அலுவலகத்தை பிரிப்பதை இக்கிளை வன்மையாக கண்டிக்கிறது. இதனை தடுக்க மையச்சங்கம் உறுதியாக செயல்பட வேண்டுமென தஞ்சை கிளை கேட்டுக் கொள்கிறது.

4. தமிழ்நாடு பணியாளர் தேர்வாணையம் மூலம் இளம் பொறியாளர்களை தேர்வு செய்ய விரைந்து நடவடிக்கை எடுக்குமாறு தஞ்சை கிளை கேட்டுக் கொள்கிறது.

# கண்ணீர் அஞ்சலி





S.G.சரவணபவன் S.நடராஜரத்தினம்

மறைவு: 26.10.2023 மறைவு: 26.10.2023

நமது சங்கத்தில் உதவிசெயற்பொறியாளர் பதவி உயர்வின் போது சங்கத்திற்காக கடுமையாக உழைத்தவர் பொறியாளர் திரு.S.G.சரவணபவன் அவர்கள். அவருடைய மறைவு, அவருடைய குடும்பத்திற்கு மட்டுமல்ல, நமக்கும் பெரிய இழப்பு. உதவிசெயற்பொறியாளர் பதவி உயர்வு சம்பந்தப்பட்ட பல்வேறு வழக்குகளில் தன் உடல் நலனை கருத்தில் கொள்ளாமல் மிக கடுமையாக உழைத்தவர். அந்த வழக்குகளில் முழு ஈடுபாட்டுடன் தன்னை ஈடுபடுத்திக் கொண்டவர். நல்ல மனிதர். அதிர்ந்து கூட பேசாதவர். அவருடைய குடும்பத்தாருக்கு தமிழ்நாடு பொறியியல் சங்கத்தின் சார்பாக ஆழ்ந்த வருத்தத்தை தெரிவித்துக் கொள்கிறோம். அன்னாருடைய ஆன்மா சாந்தியடைய வேண்டுகிறோம்.

மறைந்த மூத்த பொறியாளர் திரு. S.நடராஜரத்தினம் அவர்கள் நமது சங்கத்தின் முன்னாள் மைய மண்டல செயலாளராக பொறுப்பு வகித்தவர். அவருடைய குடும்பத்தாருக்கு தமிழ்நாடு பொறியியல் சங்கத்தின் சார்பாக ஆழ்ந்த வருத்தத்தை தெரிவித்துக் கொள்கிறோம். அன்னாருடைய ஆன்மா சாந்தியடைய வேண்டுகிறோம்.

தமிழ்நாடு பொறியியல் சங்கம் தஞ்சாவூர் கிளையின் பொதுக்குழுக்கூட்டத்தில் பதவி உயர்வு மற்றும் பணிஓய்வு பெற்ற பொறியாளர்களுக்கு பாராட்டு தெரிவித்தல்.








Under Postal Regd No. TN/CH/(C)/591/2022-2024 & WPP LICENCE No.TN/PMG(CCR)/WPP-664/2022-2024,
Date of Publiciation 1st Week of Every Month. R.N.I. No.R.33590/1978. Posted on 5-11 of Every Month

November 2023

தமிழ்நாடு பொறியியல் சங்கம் தஞ்சாவூர் கிளையின் பொதுக்குழுக்கூட்டத்தில் பணிஓய்வு பெற்ற கிளைத்தலைவர் பொறியாளர் P.மாரிச்செல்வன் அவர்களுக்கு பாராட்டு தெரிவித்தல்.




தொலைபேசி : சங்கம் : 28525786
இல்லம் : 28551993

பொறியியல் கதிர்
PORIYIYAL KADHIR

அனுப்புநர்:
தமிழ்நாடு பொறியியல் சங்கம்
சேப்பாக்கம், சென்னை - 600 005.
முகவரி சரியில்லையேல் திருப்பி அனுப்பவும்

REGD. NEWS PAPER
POSTED AT EGMORE RMS1/ PATRIKA CHANNEL
POSTED WITHOUT PRE-PAYMENT SYSTEM

பெறுநர்

PRINTED BY:Mr. J. VINOTH, AND PUBLISHED BY Er.S.K. KARUPPUCHAMY, D.C.E.AMIE., ON BEHALF OF TAMIL NADU ENGINEERING ASSOCIATION PWD, AND PRINTED AT AALAYAM ART PRINTERS, NO.5, HAJ HUSSAIN STREET, ICE HOUSE, CHENNAI-14. AND PUBLISHED AT TAMIL NADU ENGINEERING ASSOCIATION PWD, PWD CAMPUS, CHEPAUK, CHENNAI-5 EDITOR Er.S.K. KARUPPUCHAMY,